அவனுக்காக கவிதைகள்...❤️💞❤️ – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/09/21/poem-11/

September 21, 2024

நாளை நான்
இல்லாமல் கூட போகலாம் நிரந்தரமற்ற இவ்வாழ்வில் இருக்கும் வரையாவது உடனிரு...
– நந்தினி

ஒரு ஆண் ஒரு பெண்ணை இவ்வளவு நேசிக்க முடியுமா.!?
என்னை பொறாமை பட வைக்குதடா என்னவனே.! உன் அன்பு ....!!
– Sudhakar

காமத்தை யாரும் அரவணைப்பதில்லை அது காதலுடன் சேரும்வரை..!

நம்மை சேர்த்துவிட்டு காமம் சென்றாலும் காதல் குறைவதில்லை...!

– Poetry_.in

என்னவன்
காதலின் மேல் நம்பிக்கை வரக்காரணமே என்னவன் மேல் ஏற்பட்ட நம்பிக்கைதான்...
காதலும் இவ்வளவு அழகானதென உணர்த்தியதும் என்னவனின் அன்புதான்!
– Unknown

ஆறுதல்
காதல் என்பது இன்பத்தின் பொருட்டில்லை அது ஒரு தன்னம்பிக்கை... இந்த உடலுக்கு இன்னும் ஒரு மதிப்பிருக்கிறது எனும் ஒரு ஆறுதல்

-மனுஷ்ய புத்திரன்

உடல் முழுவதும் முத்தம் :-
சில நேரங்களில் அவள் எவ்வளவு மிருதுவாக இருக்கிறாள் என்பது?...
எனக்கும் என் உதட்டுக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம் ..!
-கதிரேஷ்.

ஒரு காதல் நட்பாக மாறுகிறது கருணையாக மாறுகிறது கனிவாக மாறுகிறது
பெருந்தன்மையாக மாறுகிறது
இப்படியெல்லாம் மாறுவதற்குப் பதில் அது எந்த சமரசமுமற்று முறிந்திருக்கலாம்
அப்போதும் அது காதலாகவே இருந்திருக்கும்
– மனுஷ்ய புத்திரன் (to unknown)

உன்னிடம் சொன்னால் நீ சந்தோஷப்படுவ என்று பகிரப்படும் மகிழ்ச்சிகளிலும்..!
உன்னிடம் சொன்னால் நான் சரியாயிடுவேன் என்று பகிரப்படும் துயரங்களிலும்..!!
நிறைந்து இருக்கிறது..!! உண்மையான நட்பும் காதலும்..!!
– Jupiter Aathy

பேராசை என்றானபோதும்,
உன்னுடன் கொஞ்சம் காலம் பயணிக்க வேண்டும் என்பதே என் வாழ்வின் இப்போதைய அதிகபட்ச ஆசை..
நீ தேற்றுவது பிடித்திருக்கிறது. வீம்பாக உன்னிடம் வந்து உடைகிறேன்.
என்னை அள்ளிக்கொள்
– Haran_creators

பிழைகளோடு உங்களை ஏற்றுக் கொண்டவர்களும், தவறுகளுக்காக உங்களை மன்னித்தவர்களும் தான் உங்கள் மீட்பர்கள்.
அவர்களுக்கு விசுவாசமாயிருங்கள்.
– பிரபாகரன் சேரவஞ்சி

சிலர் நமக்காகவே பிறந்திருப்பார்கள், நம்மீது அன்பு காட்டவே பிறந்திருப்பார்கள், நம் மகிழ்ச்சிக்கு காரணமாக இருப்பார்கள், அவர்களோடுதான் இந்த வாழ்க்கை அழகாகிறது, ஆம் இவையெல்லாம் உண்மைதான் “உன்னோடுதானே என் வாழ்க்கை அழகாகிறது”.
– viki

காமத்திற்காகத்தான் நீயும் நானும் சந்திக்கிறோமாம்...
நம்மைப் பற்றி அதிகம் தெரியாத நம்மோடு இருப்பவர்களே இப்படி நினைக்கிறார்கள்...
நமக்கு தானே தெரியும் உன் காயத்திற்கு நான் மருந்து என் வெறுமைக்கு உன் கருணை
– Se. Radhakrishnan

என்னவன்
அன்பானவன் அழகானவன் ஆடம்பரம் இல்லாதவன் அன்னை போல் என்னை பார்த்து கொள்பவன் ஆழமாக என்னை நேசிப்பவன் அவனுக்கென்று ஆசைகள் இல்லாதவன் என் உலகமாய் இருப்பவன் என் வலிகளை புரிந்துக்கொள்பவன் என் வாழ்க்கைக்கு அர்த்தத்தை சேர்த்தவன் என் சந்தோஷத்திற்காக உழைப்பவன் எனக்காகவே பிறந்தவன் என்னவன்
– கவிதை உலகம்

என்மனம் தடுமாறும்போதோ, நான், தனிமையில் இருப்பதாய் உணரும்போதோ,
மூச்சுமுட்ட அழுகை வரும்போதோ,
தவிர்க்க முடியா சோகத்தையோ பகிர்ந்து கொள்ள..!!
என்மனம் தேடுவது உன்னையும், உன் அரவணைப்பையும் தான்…
– Suresh Nandhu